2016 பிப்ரவரி 18]

கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். சாயமலைப் பகுதியில் தரம் உயர்த்தப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சாயமலை கால்நடை மருந்தகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

மீன் விதைப் பண்ணை

***35613—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பகுதியில் அரசு மீன் விதைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; இல்லாமை இல்லாத நிலை வேண்டுமென்ற உயர்ந்த

இலட்சியத்தை உள்ளத்தில் உறுதியாக ஏற்று, தமிழக மக்கள் வாழ்விற்காக தம்மையே அர்ப்பணித்துக்கொண்டு, நாளும் உழைத்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பகுதியில் அரசு மீன் விதைப் பண்ணை அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

73—

புதிய கட்டடம்

***18093 திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கடம்பூர் பேரூராட்சியிலுள்ள வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு மற்றும் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

கடம்பூர் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் நீண்ட நாட்களுக்கு முன்னதாகக் கட்டப்பட்டதாலும், கட்டடம் இடிந்து விழும் நிலையில் குடியிருப்புக்கு ஏற்றதாக இல்லாததாலும், அதனை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மறு கட்டுமானம் என்ற வகைப்பாட்டின்கீழ், கடம்பூர் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.10.90